***பிரச்சனைக் கணக்குகள் (காலமும் நேரமும்) பக்கம் 151***

***பெயர்:*** ____________________

1. பின்வரும் அட்டவணை இரு ஆசிரியர்கள் பணிபுரிந்த கால அளவைக் காட்டுகிறது.

| | |
|---|---|
| திருமதி வள்ளியம்மை | 2 பத்தாண்டு 6 ஆண்டு |
| திருமதி தெய்வானை | 2.5 பத்தாண்டு |

இரு ஆசிரியர்களும் பணியாற்றிய மொத்தக் கால அளவைப் பத்தாண்டிலும் ஆண்டிலும் குறிப்பிடுக. -___ பத்தாண்டு -______ ஆண்டு

2. பக்தி வீடமைப்புப் பகுதி கட்டப்பட்டு 20 ஆண்டு 8 மாதங்கள் ஆகிவிட்டன. சூரியா வீடமைப்புப் பகுதி கட்டப்பட்டு $15\frac{1}{2}$ ஆண்டுகள் ஆகிவிட்டன. இரண்டு வீடமைப்பு பகுதிகளும் கட்டப்பட்ட கால அளவின் வேறுபாட்டை ஆண்டிலும் மாதத்திலும் கணக்கிடுக. -_____ ஆண்டு -_______ மாதம்

3. ஒரு பாலத்தின் கட்டுமானப் பணி 20 செப்டம்பர் 2016 முதல் 25 ஜூன் 2017 வரை நடந்தது. பாலத்தின் கட்டுமானப் பணியின் கால அளவை நாள்களில் கணக்கிடுக.

-_____ நாட்கள்

4. அறிவழகன் ஒரு கணிதத் தேர்வைக் காலை மணி 8.40க்கு எழுதத் தொடங்கினான். அவன் அந்தத் தேர்வை $2\frac{1}{2}$ மணி நேரம் எழுதினான். அவன் தேர்வு எழுதி முடித்த நேரத்தை மணியிலும் நிமிடத்திலும் கணக்கிடுக.

-___ மணி -_______ நிமிடம்

5. எழுத்தாளர் ஒருவர் நாவல் ஒன்றனை எழுதுவதற்கு 1 ஆண்டு 8 மாதம் எடுத்துக் கொண்டார். ஆனால், அவர் நாவலைக் காட்டிலும் சிறுகதையை $\frac{1}{2}$ ஆண்டு முன்னரே எழுதிவிட்டார். அவர் சிறுகதை எழுத எடுத்துக் கொண்ட கால அளவை ஆண்டிலும் மாதத்திலும் கணக்கிடுக. -___ ஆண்டு -_______ மாதம்

6. A கட்டடத்தின் வயது 4 நூற்றாண்டு 3 பத்தாண்டாகும் அதன் அருகே 0.5 பத்தாண்டுகள் கழித்து B கட்டடம் கட்டப்பட்டது. B கட்டடத்தின் வயது என்ன?

-___ ஆண்டு

LIVEWORKSHEETS

7. கலையரசியின் வயது 9 ஆண்டு 7 மாதமாகும். கலையரசிக்கும் அவள் தம்பிக்கும் இடையே உள்ள வயது வேறுபாடு $2\frac{1}{6}$ ஆண்டாகும். கலையரசியின் தம்பி வயதைக் கணக்கிடுக.

-_____ ஆண்டு

8. ஒரு பட்டணத்தில் உள்ள உயரமான கட்டடத்தின் வயது 2 பத்தாண்டு 4 ஆண்டுகளாகும். மற்றொரு பட்டணத்தில் உள்ள உயரமான கட்டடத்தின் வயது 5 பத்தாண்டு 9 ஆண்டுகளாகும். அந்த இரண்டு கட்டடங்களின் மொத்த வயதைக் கணக்கிடுக.

-_____ ஆண்டு

LIVEWORKSHEETS